**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF M/s T.MUTHULAKSHMI ROUGH STONE AND GRAVEL QUARRY, SF.NO.100/6B, 100/7, 100/8, 100/9, 100/10 & 100/11, KONGANAKKURICHI VILLAGE, ARUPPUKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 17.11.2022 AT ABOUT 11.00 AM IN M/S SATHYA MAHAL, M.REDDIAPATTI, ARUPPUKOTTAI TALUK, VIRUDHUNAGAR DISTRICT.**

**Present:**

| | | |
|---|---|---|
| 1. Thiru J. Ravikumar | : | District Revenue Officer/<br>Additional District Magistrate,<br>Virudhunagar. |
| 2. Thiru A. Shanmugam | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 3. Thiru K. Ganesan | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 4. Selvi. V. Kalaijothi | | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Virudhunagar. |
| 5. Public and representatives from industry. | : | 144 Nos (List enclosed) |

The public hearing for obtaining Environment Clearance under EIA Notification, 2006 for the proposed project of M/s T.Muthulakshmi Rough Stone and Gravel Quarry, SF.No.100/6B, 100/7, 100/8, 100/9, 100/10 & 100/11, Konganakkurichi Village, Aruppukottai Taluk, Virudhunagar District at M/s Sathya Mahal, 1/117A, Aruppukottai - Sayalgudi Main Road, M.Reddiapatti - 626 118, Aruppukottai Taluk, Virudhunagar District was started at about 11.00 am on 17.11.2022 with Tamil prayer song. The District Environmental Engineer, Virudhunagar welcomed the District Revenue Officer / Additional District Magistrate, Virudhunagar, other officials, public and representatives of the project. The District Environmental Engineer explained on the notice issued on the public hearing in the dailies "Dinathanthi" and "The Times of

India" on 07.10.2022. He further mentioned that information and awareness was created on public hearing through notices to the public. The arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notification, 2006. He informed that the public can express their views on the project after the project authorities explained their project. He added that the written complaints would also be received.

The proceedings of the meeting would be video recorded and sent to SEIAA along with the minutes of the meeting. Then the District Environmental Engineer invited the representative of the project to explain the project.

Thiru. Saminathan Environmental Consultant of M/s T.Muthulakshmi Rough Stone and Gravel Quarry had explained the project and the Environmental Management Plans.

The views on the proposed project expressed by the public orally are as follows:

**1. Thiru. Sivabackiam, K. Meenatchipuram**

He informed that his land is located near the quarry. As they are carrying out blasting in the bore hole of about 20 feet depth, it causes high vibrations. The open wells are of depth of about 50 feet and the quarry is of depth of 150 - 200 feet. Hence, the water in the well get drained. Further, due to dust emission the agriculture is also affected since his land is at a distance of 600 feet.

**2. Thiru. Anbarasan, S/o Arumugam, K. Meenatchipuram**

The quarry operations affect us at high level. Our land of about 50 acres is damaged due to the quarry operations. Due to transport of the materials from the quarry, the roads are also get damaged.

**3. Thiru. Veerapandian, Alangulam**

He informed that T. Muthulakshmi quarry is being carried out in extent of 1.96 Hectares only. The rocks are of Charnokite type which will not allow water flowing from the nearby wells to the quarry pits. The industry is sprinklering water to suppress the dust. The vibration from the quarry is very less. The proprietor of the quarry is kind person - he feeds even to birds - so he will take

all the safety measures. More people in the village get employment from the quarry. From the DMF fund many welfare activities are being carried out in the village. Hence, the project should be allowed.

**4. Thiru. Pothiraj, M. Redddiapatti**

He informed that it has been proposed to start the new quarry in konganakkurichi area. The people attending the meeting are saying that the proprietor of the quarry is helpful to others. Hence, I welcome this project.

**5. Thiru. Narasingaperumal, Union Counsellor, Aladipatti**

About 1 crore 30 lakhs of rupees have been received through tax from the quarries. From the said amount, we have provided many welfare facilities including drinking water to the people. This year we have received about 68 lakhs of rupees. So the people should give their co-operation for starting the quarries.

**6. Thiru. K. Balasubramaniyan, Rajapalayam**

Some people are afraid of the quarries. There is good and bad in each activities. The quarries give employment to many people and help to development of village. We can't say that the village declined due to operation of the quarry. Hence, he informed that he welcome the project.

After this, since no one came forward to give opinion/view on the project, the DEE has informed that the public hearing was concluded. The written petitions were received from the public. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has concluded the public hearing with vote of thanks. National Anthem was played and meeting came to end.

03 Nos of petitions received in the office of District Environmental Engineer, Virudhunagar and during the public hearing are enclosed. List of public attended the public hearing and recorded video (CD) of the entire proceedings are enclosed herewith.

Encl.:

1. Public Notice in English and Tamil
2. Attendance
3. Written petitions - 03 Nos
4. Video CD - 1 No

22/11/22
District Environmental Engineer,
Tamil Nadu Pollution Control Board,
Virudhunagar.

22/11/2022
District Revenue Officer/
Additional District Magistrate,
Virudhunagar.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், கொங்கணக்குறிச்சி கிராமத்தில் புல எண். 100/6B, 100/7, 100/8, 100/9, 100/10 & 100/11-ல் தொடங்க உத்தேசிக்கப்பட்ட தி/ள் டி. முத்துலட்சுமி கல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பாக 17.11.2022 முற்பகல் 11.00 மணியளவில் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம் எம்.ரெட்டியாபட்டி கிராமத்தில் உள்ள தி/ள் சத்யா மகாலில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்.

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. ஜெ. ரவிக்குமார் | : | மாவட்ட வருவாய் அலுவலர்/ கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர் விருதுநகர். |
| 2 | திரு. ஆ. சண்முகம் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர். |
| 3 | திரு. க. கணேசன் | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர். |
| 4 | செல்வி. வே. கலைஜோதி | | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர். |
| 5 | பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் | : | 144 நபர்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டம், கொங்கணக்குறிச்சி கிராமத்தில் புல எண். 100/6B, 100/7, 100/8, 100/9, 100/10 & 100/11-ல் தொடங்க உத்தேசித்துள்ள தி/ள் டி. முத்துலட்சுமி கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனம் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் அருப்புக்கோட்டை வட்டம் எம். ரெட்டியாபட்டி கிராமத்தில் உள்ள தி/ள் சத்யா மகாலில் 17.11.2022 அன்று முற்பகல் 11.00 மணியளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது. கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர் / கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர், ஏனைய அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் பிரதிநிதிகள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும்

விபரம் குறித்து ஏற்கனவே "தினத்தந்தி" மற்றும் "தி டைம்ஸ் ஆப் இந்தியா" நாளிதழ்களில் 07.10.2022 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், இப்பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்துவது தொடர்பாக பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள் மூலம் விரிவாக விழிப்புணர்வு மற்றும் அறிவிப்பு செய்ததைக் கூறினார். இந்த கூட்டத்திற்கான ஏற்பாடுகள் இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் 14.09.2006 அன்று வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதி விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் தங்களது கருத்துக்களை வழங்கலாம் என கேட்டுக்கொண்டார். எழுத்துப்பூர்வமாக விண்ணப்பங்கள் வழங்க விரும்புபவர்களும் அதனை வழங்கலாம் என தெரியப்படுத்தினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார். பிறகு தொழிற்திட்டம் குறித்து விளக்குமாறு தொழிற்சாலை பிரதிநிதியை கேட்டுக்கொண்டார்.

பின்பு தி/ள் டி. முத்துலட்சுமி கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர் திரு. சாமிநாதன் இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இது தொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

அதன் பின்பு, இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து வாய்மொழியாக வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு:

1. <u>திரு. சிவபாக்கியம், கே. மீனாட்சிபுரம்</u>

எங்களுடைய தோட்டம் இக்குவாரிக்கு அருகில் உள்ளது. 20 அடி குழி வைத்து வேட்டு போடுகிறார்கள். அதிக அளவில் அதிர்வு ஏற்படுகிறது. கிணறு 10 கஜம் அல்லது 11 கஜம் உள்ளது. குவாரி 150 அடி, 200 அடி ஆழமாக போகிறது. அதனால் கிணற்று நீர் பாதிக்கப்படுகிறது மற்றும் தூசியினால் அதிகளவில் விவசாயம் பாதிக்கப்படுவதாகவும் கூறினார். எனது தோட்டத்திற்கும் குவாரிக்கும் 600 அடி தூரம் தான் உள்ளது.

2. திரு. அன்பரசன், த/பெ. ஆறுமுகம், கே . மீனாட்சிபுரம்

மிகவும் அதிகளவில் பாதிப்பு ஏற்படுவதாக கூறினார். நாங்கள் மூன்று பேர் வந்துள்ளோம். பாதிப்பு எங்களுடைய தோட்டத்திற்கு அதிகளவில் ஏற்படுகிறது. 15 ஏக்கர் விவசாயம் செய்கிறேன். கிரசர் வண்டிகளால் ரோடு மிகவும் பாதிப்பு ஏற்படுகிறது எனவும் கூறினார்.

3. திரு. வீரபாண்டியன், ஆலங்குளம்

டி. முத்துலட்சுமி குவாரி கொங்கணக்குறிச்சி கிராமத்தில் 1.96 ஹெக்டேரில் குறைந்த அளவில் சுரங்கம் ஆரம்பித்துள்ளார்கள். குறைவான உற்பத்தி தான் செய்கிறார்கள். தூய்மையான சார்னோகைட் என்பது தண்ணீர் வெளியேறாமல் இருக்கக்கூடிய பாறை என்பதால் குவாரிக்கு மற்ற கிணறுகளில் இருந்து தண்ணீர் வராது. தூசி வருவதை தடுக்க தண்ணீர் தெளித்து கொண்டு தான் இருக்கிறார்கள். அதிர்வு குறைவான முறையில் இக்குவாரியானது செயல்படும். குவாரி உரிமையாளர் பறவைகளுக்கு உணவளிப்பவர். மக்களுக்கு எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதை குறிக்கோளாக கொண்டவர். ஆகவே இக்குவாரியினால் நிறைய வேலை வாய்ப்புகள் கிடைக்க வாய்ப்புள்ளது. டிஎம்எப் தொகை மூலம் மக்களுக்கு தேவையான உதவிகளை செய்துள்ளார்கள். ஆகவே இத்திட்டம் கண்டிப்பாக வரவேண்டும் என கூறினார்.

4. திரு. பி. போத்திராஜ், எம். ரெட்டியாபட்டி.

கொங்கணக்குறிச்சி பகுதியில் புதிதாக குவாரி அமைக்க ஏற்பாடு செய்துள்ளார்கள். கருத்து கேட்பு கூட்டத்திற்கு வந்த பொதுமக்கள் அனைவரும் குவாரி உரிமையாளர் உதவி செய்யக்கூடியவர் என்று கூறுகிறார்கள். எனவே இத்திட்டத்தினை அவர் வரவேற்பதாக கூறினார்.

5. திரு. நரசிங்கப்பெருமாள், ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர், ஆலடிப்பட்டி

சுரங்கம் உதவித்தொகை என்பது சுரங்கம் குவாரி மூலம் நமக்கு வருகிறது. போன வருடம் மட்டும் ஒரு கோடியே முப்பது இலட்சம் தொகை வந்தது. அதன் மூலம் தான் பொதுமக்களுக்கு இலவச குடிநீர் போன்ற உதவிகளை செய்தோம். இந்த வருடம் ரூ.68 இலட்சம் வந்திருக்கிறது. இவை அனைத்தும் குவாரி மூலமாக தான் வருகிறது. ஆகவே குவாரி வருவதற்கு பொதுமக்கள் ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்தார்.

6. திரு. கே. பாலசுப்பிரமணியன், இராஜபாளையம்

குவாரி என்றால் பயம் என்று கூறுகிறார்கள். எல்லா துறையிலும் நன்மையும் உண்டு தீமையும் உண்டு. இந்த சுரங்கம் அமைப்பதால் நிறைய பேருக்கு வேலை கிடைக்கும்; கிராமப்புற வளர்ச்சி மேம்படும் என்பதை சிந்தித்து பார்க்கவேண்டும். சுரங்கத்தினால்தான் கிராமம் வீழ்ச்சி அடைந்துள்ளது என்று கூற முடியாது. ஆகவே இத்திட்டத்தினை வரவேற்பதாக கூறினார்.

இதன் பின்பு, இத்திட்டம் தொடர்பாக கருத்துக்கூற வேறு யாரும் முன்வராததால், கருத்து கேட்பு முடித்துக் கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டது. எழுத்துப்பூர்வ விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார். நாட்டுப்பண் இசைக்கப்பட்டு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம் மற்றும் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் ஆகியவற்றில் பெறப்பட்ட 03 விண்ணப்பங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ குறுந்தகடு ஆகியவை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

இணைப்பு :

1. நாளிதழ்களில் வெளிவந்த பொது அறிவிப்பு
2. வருகை புரிந்தோர் விபரம்
3. எழுத்துப்பூர்வ மனுக்கள் - 03 எண்ணிக்கை
4. வீடியோ குறுந்தகடு - 1

22/11/22

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

22/11/2022

மாவட்ட வருவாய் அலுவலர்/
கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர்
விருதுநகர்.